
ISBN:978-81-687272-9-8

பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்



ஜி யு போப்

செந்தமிழறிஞர்கள் 108

NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in



https://www.annacentenarylibrary.org/pages/view/7-%E0%AE%9C%E0%AE%BF%E0%AE%AF%E0%AF%81%E0%AE%AA%E0%AF%8B%E0%AE%AA%E0%AF%8D

செந்தமிழ்சிற்பிகள்

ஜி. யு. போப் (1820 - 1908)



அறிமுகம்

ஜி.யு. போப் கனடாவில் பிரின்ஸ் எட்வெர்ட் தீவு என்னுமிடத்தில் ஏப்ரல் 24ந்தேதி 1820-ம் ஆண்டில் பிறந்தார். 19 வயது வரை இங்கிலாந்து ஹாக்ஸ்டன் கல்லூரியில் கல்வி பயின்றார். விவிலிய நூற்கழகத்தைச் சேர்ந்து சமயப்பணி புரிவதற்காக 1839-இல் தமிழ் நாட்டிற்கு வந்தார். கப்பலில் பயணம் செய்த எட்டு மாதங்களிலேயே தமிழை நன்கு கற்றார்.

இங்கிலாந்து ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில் 1885 முதல் 1908 வரை தமிழ் மற்றும் தெலுங்கு கற்பிக்கும் பேராசிரியராகப் பணியாற்றினார்.

தமிழ்நாட்டில் நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழ்ப் பணியாற்றிய தமிழறிஞர். அவருடைய இறுதி விருப்பம் அவரது தமிழ்ப்பற்றை வெளிக்காட்டுவதாக அமைந்து இருந்தது.

கல்லறையில் தம்மை அடக்கம் செய்யும் போது தான் மொழிபெயர்த்து வெளியிட்ட திருக்குறள் மற்றும் திருவாசகத்தையும் உடன் வைக்க வேண்டும் என்றும்,

என் கல்லறையை அமைப்பதற்காகும் செலவில் ஒரு பகுதி தமிழ் மக்களின் நன்கொடையாக அமைய வேண்டும் மற்றும் தனது கல்லறையின் மீது 'இங்கே ஒரு தமிழ் மாணவன்' உறங்கிக் கொண்டிருக்கிறான் என்று செதுக்கப்படவேண்டும் என்றும் தன் விருப்பத்தை எழுதி வைத்தார்.

தமிழ் மற்றும் இலக்கியப் பணி

- அவர் ஆரியங்காவுப் பிள்ளை, இராமானுசக் கவிராயரிடத்திலும் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றார். தமிழ்த்தாத்தா உ.வே.சா அவர்களுக்கு அடிக்கடி கடிதம் எழுதி தன் சந்தேகங்களை போக்கிக் கொள்வார்.
- ஆங்கில மொழி இதழ்களில் (Royal Asiatic Quarterly, The Indian Magazine)தமிழ் குறித்த ஆய்வுக் கட்டுரைகளையும், தமிழ் புலவர்களையும், தமிழ்த் துறவிகளையும் பற்றி ஆங்கிலத்தில் நூல்கள் எழுதினார்.
- இடைவிடாது பழைய தமிழ்நூல்களைக் கற்று வந்தார். பழைய ஏட்டுச் சுவடிகளைத் தேடிச் சேகரித்தார்
- கலாசாலை அமையவும், நூல் நிலையம் உருவாகவும் பாடுபட்டார்.

படைப்புகள்

- தமிழ் இலக்கணத்தை Elementary Tamil Grammar என மூன்று பாகமாக எழுதினார்.
- மேலைநாட்டார் தமிழை எளிதில் கற்றக் கொள்ளும் வகையில் தமிழ்–ஆங்கில அகராதி ஒன்றையும், ஆங்கிலம்–தமிழ் அகராதி ஒன்றையும் போப் வெளியிட்டார்.
- திருக்குறள், நாலடியார், பழமொழி, இனியவை நாற்பது முதலிய நூல்களில் இருந்து ஒழுக்க நெறியை போதிக்கும் சிறந்த பாடல்களை

தேர்ந்தெடுத்து தனிச்செய்யுள் கலம்பகம் என்ற பெயரில் தொகை நூல் ஒன்றை வெளியிட்டார்.

மொழிபெயர்ப்பு

- 1886ஆம் ஆண்டு திருக்குறளை The Sacred Kural என்று 1,330 குறள்களையும் முதன்முதலாக முழுமையாக ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.
- தமிழ் மீது பெரும்பற்றுக் கொண்ட இவர், நாலடியார், புறப்பொருள் வெண்பாமாலை, புறநானூறு, திருவருட்பயன் ஆகியவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.
- ஜி.யு.போப்பின் ஆகச்சிறந்த படைப்பாகக் கருதப்படுவது அவரது திருவாசக மொழிபெயர்ப்பு .

விருதுகள்

- உதகையில் அவரது கல்விப் பணிக்காக இங்கிலாந்தின் கந்தர் புரி அத்தியட்சர் 'மறைநூற் புலவர்' எனும் பட்டம் அளித்தார்.
- தமிழக அரசு சென்னை மெரினா கடற்கரையில் உருவச்சிலை அமைத்து கவுரவப்படுத்தியுள்ளது .

(😊)(😊) ᘓᘓᘓᘓᘓᘓᘓᘓᘓᘓᘓ (😊)(😊)

காணொளிகள்

01] **ஜி.யு.போப் - முழு தகவல்**
https://www.youtube.com/watch?v=8-HE53uzYQ0 [54:58]

02] **ஜி. யு. போப் | தமிழுக்கு தொண்டு செய்த வெளிநாட்டவர்**
https://www.youtube.com/watch?v=Gd9iF4b-doo [15:52]

03] **ஜி.யு.போப் முழு நூல் குறிப்பு**
https://www.youtube.com/watch?v=-nFKDlYwFl8 [16:57]

04] **ஜி.யு.போப் தமிழ்த் தொண்டு**
https://www.youtube.com/watch?v=RsS3AglOMy8 [23:57]

05] **ஜி யு போப் & வீரமாமுனிவர்**
https://www.youtube.com/watch?v=qQG0z7xusZg [30:45]

06] **ஜி.யு.போப்**

https://www.youtube.com/watch?v=-0CEqOWHQRc [45:21]

07] **ஜி.யு.போப் பற்றிய முழு தகவல்கள்**

https://www.youtube.com/watch?v=WivdwYoUziw [22:30]

08] **ஜி.யு.போப்**

https://www.youtube.com/watch?v=Zuope83pTas [25:35]

பங்களிப்பு

இறையியல் பணி



ஜி.யு. போப் சிலை, திருவல்லிக்கேணி, சென்னை

மதபோதகராக வெஸ்லியன் கிறிஸ்தவ திருச்சபையில் சேர்ந்த ஜி.யு. போப், பத்தொன்பதாவது வயதில் இறைப்பணிக்காக 1839-ம் ஆண்டு தென்னிந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். கப்பலில் பயணம் செய்த எட்டு மாதங்கள் தமிழ் கற்றார். சென்னைக்கு வந்து சாந்தோம் பகுதியில் தங்கினார், இங்கிலாந்து திருச்சபையில் சேர்ந்து 'குரு' பட்டம் பெற்றார்.

எஸ். பி. ஜி எனும் நற்செய்திக் கழகத்தின் தொண்டராக தூத்துக்குடி அருகே இருந்த சாயர்புரத்தில் குடியேறினார்.

பிற்காலத்தில் தஞ்சாவூரிலும், ஊட்டியிலும் பெங்களூரிலும் பல வருடங்கள் இறைப்பணி புரிந்தார்.

தஞ்சாவூரில் அவர் பணியில் இருந்தபோது, உயர் சமூகத்தைச் சேர்ந்தோராகக் கருதப்பட்டோர் கிறிஸ்தவத்திற்கு மதம் மாறிய பின்னரும் ஜாதி உயர்வு தாழ்வுகளை கைவிடாது, தங்களுக்கு முதலிடம் தருமாறு கோரினார். ஜி.யு. போப் இறைவன் முன்னிலையில் அனைவரும் சமம் என்றார். அவரது கருத்து அவர்களால் ஏற்கப்படவில்லை. கிறிஸ்தவ சபையினரும் அவர்களை சார்ந்து நின்றதால், போப் தமது 16 வருட நற்செய்திக் கழகத் தொண்டர் பணியிலிருந்து விலகினார். கிறிஸ்தவ சங்கங்களின் சார்பின்றி அவர்களது பொருள் உதவியின்றித் தனிப்பட்ட முறையில் சமயப் பணியாற்றும் நோக்குடன், தஞ்சையிலிருந்து மனைவி மற்றும் ஐந்து பிள்ளைகளுடன் மாட்டு வண்டியில் ஏறி 24 நாட்கள் பயணம் செய்து ஊட்டி சென்றார்.

கல்விப் பணி

தமிழகம் வந்ததும் புலவர் ஆரியங்காவுப் பிள்ளை என்பவரிடமும் இராமானுசக் கவிராயரிடத்திலும் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றார். தமிழ் தவிர தெலுங்கு, மற்றும் சமஸ்கிருதம் ஆகிய மொழிகளையும் கற்றுத் தேர்ந்தார்.

சாயர்புரத்தில் அவர் ஆற்றிய சேவை சமயப்பணி, கல்விப்பணி என இரு பகுதிகள் கொண்டது. அங்கே கிறிஸ்துவ மத போதகராகச் சென்றவர் கல்லூரி ஒன்றை அமைத்தார். சிறந்த ஆசிரியர்களை நியமித்து தமிழ், லத்தீன், கிரேக்கம், ஹீபுரு ஆகிய மொழிகள் அங்கு கற்றுக் கொடுக்கப்பட்டது. மேலை நாட்டு தத்துவம், உளவியல், கணிதம், தர்க்கம் ஆகியவற்றை முதன்முறையாக தமிழில் கற்பிக்கும் கல்வி நிலையமாக அது இருந்தது.

ஊட்டியில் ஐரோப்பிய மாணவர்களுக்கு ஆசிரியராக இருந்தார், பின்னர் ஒரு பள்ளியை உருவாக்கினார். சிறைத் தண்டனை பெற்றிருந்த ஐரோப்பிய குற்றவாளிகளைக் கண்டு அவர்களுடன் பேசுவதும் அவர் வழக்கம். இடைவிடாது பழைய தமிழ்நூல்களைக் கற்றுவந்தார். பழைய ஏட்டுச் சுவடிகளைத் தேடிச் சேகரித்தார். அம்மலையில் வாழும் தோடர்

இனத்தவரோடு பழகினார். நீலகிரித் தோடர் பேசும் மொழியைப் ஆராய்ந்து அதன் இலக்கணத்தை எழுதியுள்ளார்.

தமிழ்ப் பணி

1851-ம் ஆண்டு இரண்டாவது முறை தமிழகம் வந்தபோது எட்டு ஆண்டுகள் தஞ்சாவூரில் இருந்தார். இந்தக் கால கட்டத்தில் புறநானூறு, நன்னூல், திருவாசகம், நாலடியார் போன்ற நூல்களைக் கற்றார். சில ஆங்கில மொழி இதழ்களில் தமிழ் குறித்த ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதினார்.

42 ஆண்டுகள் இந்தியாவில் வாழ்ந்த போப் 1882-ம் ஆண்டு தனது 62-வது வயதில் இந்தியாவை விட்டு இங்கிலாந்துக்கு புறப்பட்டு சென்றார். 1885-ல் இங்கிலாந்தில் உள்ள ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக பணியில் சேர்ந்து அங்கு மாணவர்களுக்குத் தமிழ், தெலுங்கு மொழிகளைக் கற்றுக்கொடுத்தார்.

1886-ம் ஆண்டு திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிப்பெயர்த்தார்.

1893-ல் நாலடியாரை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். நாலடியார் மொழியாக்கத்துடன் ஆராய்ச்சியோடு கூடிய முன்னுரை ஒன்றை எழுதியுள்ளார். நாலாடியாரின் பொருளை விரித்து உரைக்கிறார், அத்துடன் நாலாடியாரில் உள்ள வெண்பா, அதன் ஆங்கில வடிவம், இறுதியில் விரிவுரை என அமைத்திருந்தார். இதுதவிர பாட்டு முதற்குறிப்பு அகராதி, சொற்பொருள் அகராதி தவிர நூலின் இறுதியில் பொது அகராதி ஒன்றையும் அவர் தொகுத்து அளித்திருந்தார்.

நாலடியார் மொழியாக்கத்தைத் தொடர்ந்து திருவாசகத்தை மொழியாக்கம் செய்தார். முதுமையிலும் அப்பணியில் தொடர்ந்து ஈடுபட்டு, ஏப்ரல் 24, 1900 அன்று அதை வெளியிட்டார். திருவாசகம் முன்னுரையில் "என் எண்பதாவது பிறந்தநாளில் இதை வெளியிடுகிறேன். 1837-ம் ஆண்டில் முதன்முதலில் தமிழ் படிக்கத் தொடங்கினேன். நெடுங்காலம் உண்மையான பற்றுக் கொண்டு தமிழ் நூல்களை ஆராய்ந்தேன். இந்நூல் வெளியீட்டோடு என் இலக்கியப் பணி முற்றுப்பெறுகிறது" என்று குறிப்பிட்டிருந்தார்.

போப் திருவாசகம் மொழிபெயர்ப்பு தன் இறுதி இலக்கியப் பணியாக இருக்கக் கூடுமென எண்ணினார். அதன் பின்னர் எட்டாண்டுகள் அவர் வாழ்ந்து மணிமேகலையின் ஆங்கில மொழியாக்கத்தைத் துவக்கினார். அது

நிறைவுறவில்லை. அவர் மறைந்த பிறகு அதன் பகுதிகள் 'சித்தாந்த தீபிகை'யில் வெளியாயிற்று. வாழ்வின் இறுதிக்காலத்தில் புறப்பொருள் வெண்பா மாலை, புறநானூறு, திருவருட்பயன் போன்ற நூல்களைப் பதிப்பித்தார். புறநானூற்றின் சில பகுதிகளையும் மொழிபெயர்த்தார், அந்நூல் குறித்த கட்டுரைகளையும் எழுதினார்.

மூன்று இறுதி விருப்பங்கள்

முதுமையில் தளர்ச்சியடைந்த சமயம் தமது நண்பரிடம் மூன்று விருப்பங்களைத் தெரிவித்திருந்தார் ஜி.யு.போப்.

- ***இறப்புக்குப் பின் தனது கல்லறையில் இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்கிக் கொண்டிருக்கிறான்*** **என்ற வாசகம் இடம்பெற வேண்டும் (அவரது உயிலிலோ அவரது கல்லறையிலோ அத்தகைய கருத்து சேர்க்கப்படவில்லை).**
- **தமது கல்லறைக்குச் செலவிடும் தொகையில் ஒரு சிறுபகுதியாவது தமிழ் மக்களின் நன்கொடையால் அமைய வேண்டும். பச்சையப்பன் கல்லூரித் தமிழ் பேராசிரியர் செல்வக் கேசவராயர் தமிழன்பர்களிடம் நன்கொடை திரட்டி இங்கிலாந்துக்கு அனுப்பி வைத்தார்.**[1]
- **கல்லறையில் தம்மை அடக்கம் செய்யும் போது தான் மொழிபெயர்த்து வெளியிட்ட திருக்குறள் மற்றும் திருவாசகத்தையும் உடன் வைக்க வேண்டும் என்பது.**

தமிழ்நாட்டிற்கு வருகை

விவிலிய நூற்கழகத்தைச் சேர்ந்து சமயப்பணி புரிவதற்காக 1839-இல் தமிழ் நாட்டிற்கு வந்தார். கப்பலில் பயணம் செய்த எட்டு மாதங்களிலேயே தமிழை நன்கு கற்றார்.

சென்னைக்கு வந்த போப் சாந்தோம் பகுதியில் தங்கினார். வெஸ்லியன் சங்கம் சார்பாகச் சென்னை வந்த போப், சென்னையில் இங்கிலாந்து திருச்சபையில் சேர்ந்தார். அங்குக் 'குரு' பட்டம் பெற்றார். எஸ். பி. ஜி எனும் நற்செய்திக் கழகத்தின் தொண்டராக ஏற்றுக் கொள்ளப்பட்டார். அச்சங்கத்தால் சாயர்புரம் சிற்றூருக்குச் சமயத்தொண்டுக்காக அனுப்பி வைக்கப்பட்டார்.

சாயர்புரத்தில்

தூத்துக்குடிக்கு அருகே உள்ள சாயர்புரத்தில் தங்கியிருந்த அவர் ஆரியங்காவுப் பிள்ளை, இராமானுசக் கவிராயரிடத்திலும் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றார். அருகில் உள்ள செந்தியம்பலம் கிராமத்தைச் சேர்ந்த நம்மாழ்வார் என்பவர் போப் உடன் நட்பாகி ஞான சிகாமணி என்று தன் பெயரை மாற்றி கிறித்துவரானார். அதனால் ஒரு துவக்க பள்ளிக்கு அவர் பெயரைச் சூடினார் போப். தமிழ் தவிர தெலுங்கு, மற்றும் சமஸ்கிருதம் ஆகிய மொழிகளையும் கற்றுத் தேர்ந்தார்.

போப்பின் சாயர்புர பணி சமயப்பணி, கல்விப்பணி என இரு பகுதிகள் கொண்டது.

1849-ஆம் ஆண்டு திருமணம் செய்துகொண்ட போப் பின் இங்கிலாந்து சென்றார்.

தஞ்சாவூரில்

1851 ஆம் ஆண்டு தன் மனைவியுடன் தமிழகம் திரும்பினார். எட்டு ஆண்டுகள் தஞ்சாவூரில் சமயப்பணியைத் தொடர்ந்தார். இந்தக் கால கட்டத்தில் புறநானூறு, நன்னூல், திருவாசகம், நாலடியார் போன்ற நூல்களைக் கற்றார். சில ஆங்கில மொழி இதழ்களில் தமிழ் குறித்த ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதினார்.

போப்பின் தஞ்சாவூர் பணி சமயப்பணி, கல்விப்பணி, தமிழ்ப்பணி என முப்பரிமாணம் கொண்டது.

உதகமண்டலத்தில்

தஞ்சையில் கிறித்துவத்திற்கு மதம் மாறிய பின்னர்ச் சாதி உயர்வு தாழ்வுகளை மறக்காத உயர் சமூகத்தைச் சேர்ந்தோராகக் கருதப்பட்டோர் தங்களுக்கு முதலிடம் கேட்டனர். போப் இறைவன் முன்னிலையில் அனைவரும் சமம் என்றார். அவரது கருத்து முதலிடம் கேட்டோரால் ஏற்கப்படவில்லை. கிறித்துவ சபையான நற்செய்திக் கழகத்தாரும் உயர் சமூகத்தைச் சேர்ந்தோராகக் கருதப்பட்டவர்களைச் சார்ந்து நின்றதால், போப் தமது 16 வருட நற்செய்திக் கழகத் தொண்டர் பணியிலிருந்து விலகி கிறித்துவ சங்கங்களின் சார்பின்றி அவர்களது பொருள் உதவியின்றித் தனிப்பட்ட முறையில் சமயப் பணியாற்றும் நோக்குடன், போதிய பொருளின்றித் தஞ்சையிலிருந்து மனைவி மற்றும் ஐந்து மக்களுடன்

மாட்டு வண்டியில் ஏறி 24 நாட்கள் பயணம் செய்து உதகமண்டலம் சென்றார்.

உதகையில் ஐரோப்பிய மாணவர்களுக்கு ஆசிரியராக அமர்ந்து பாடம் சொன்னார், பின்னர் உதகையில் சிறந்த பள்ளியை உருவாக்கினார், சிறைத் தண்டனை பெற்றிருந்த ஐரோப்பிய குற்றவாளிகளைக் கண்டு பேசுவார். இடைவிடாது பழைய தமிழ்நூல்களைக் கற்றுவந்தார். பழைய ஏட்டுச் சுவடிகளைத் தேடிச் சேகரித்தார்.

உதகையில் அவரது பணிக்காக இங்கிலாந்தின் கந்தர் புரி அத்தியட்சர்'மறை நூற் புலவர்' எனும் பட்டம் அளித்தார்.

பெங்களூரில்

1871-இல் சில சூழல் காரணமாகப் பெங்களூர் சென்று அங்குக் கல்விப் பணியும் சமயப்பணியும் ஆற்றினார். அங்கு உடல் நலம் குன்றியதால் 1882-இல் இங்கிலாந்து திரும்பினார்.

ஜி. யு. போப் (G.U. Pope) தமிழ் இலக்கியங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து உலகிற்கு அறிமுகப்படுத்திய மிகச்சிறந்த ஐரோப்பியத் தமிழறிஞர் ஆவார். அவர் திருக்குறளை **(1886) 'The Sacred Kural'** என்றும், திருவாசகத்தை **(1900)** கவிதை வடிவிலான மொழிபெயர்ப்பாகவும் வெளியிட்டது, அவரது முக்கியப் படைப்புகளாகக் கருதப்படுகின்றன.

முக்கிய மொழிபெயர்ப்புப் படைப்புகள்:

- **திருக்குறள் (The Sacred Kural - 1886):** 1,330 குறள்களையும் முழுமையாக, அதனுடன் விளக்கவுரை, சொற்பொருள் மற்றும் அநுபந்தத்துடன் (Concordance) மொழிபெயர்த்தார்.
- **திருவாசகம் (The Tiruvacagam - 1900):** இவருடைய ஆகச்சிறந்த படைப்பாக இது கருதப்படுகிறது.
- **நாலடியார் (1893):** நாலடியாரை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, ஆராய்ச்சி முன்னுரையுடன் வெளியிட்டார்.
- **பிற:** புறநானூறு, புறப்பொருள் வெண்பாமாலை, மற்றும் திருவருட்பயன் போன்ற நூல்களையும் மொழிபெயர்த்துள்ளார்.

கல்விப்பணி:

தமிழ் இலக்கணத்தை 'Elementary Tamil Grammar' என மூன்று பாகங்களாக எழுதினார். ஐரோப்பியர்கள் தமிழை எளிதில் கற்பதற்காகத் தமிழ்-ஆங்கில அகராதியையும் வெளியிட்டார். [1] தமிழக அரசு, போப்பின் தமிழ்த் தொண்டைப் போற்றும் வகையில், சென்னை மெரினா கடற்கரையில் அவருக்குச் சிலை அமைத்துள்ளது.

ஜி.யு. போப்

https://veerakeralampudur-nellai.blogspot.com/2013/05/blog-post_16.html

தமிழ் மாணவன் உறங்கிக் கொண்டிருக்கிறான்.............!

ஒரு விளையாட்டாளரின் பிறந்த நாளைக் கொண்டாடும் மக்கள், இவரை மறந்து விட்டது ஏனோ?



மெரினா கடற்கரையில் இருக்கும் ஜி. யு. போப் சிலை

ஜி. யு. போப் (George Uglow Pope, ஏப்ரல் 24, 1820 - பெப்ரவரி 12, 1908) அமெரிக்காவில் பிறந்து கிறிஸ்தவ சமய போதகராக தமிழ் நாட்டிற்கு வந்து 40 ஆண்டு காலம் தமிழுக்கு சேவை செய்தவர்.

வாழ்க்கைச் சுருக்கம்

வட அமெரிக்காவின் பிரின்ஸ் எட்வெர்ட் தீவில் நோவா

ஸ்கோஷியா என்னுமிடத்தில் ஜோன் போப், காதரீன் யூக்ளோ போப் ஆகியோருக்கு பிறந்தார் போப். குழந்தைப் பருவத்திலேயே இங்கிலாந்துக்கு குடும்பத்துடன் குடிபெயர்ந்தார். 19 வயது வரை ஹாக்ஸ்டன் கல்லூரியில் கல்வி பயின்றார். இங்கிலாந்து பல்கலைக்கழகம் ஒன்றில் 1885 முதல் 1908 வரை தமிழ் மற்றும் தெலுங்கு கற்பிக்கும் பேராசிரியராக பணியாற்றினார். 1886 ஆம் ஆண்டு திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிப்பெயர்த்தார். புறப்பொருள் வெண்பா மாலை, புறநானூறு, திருவருட்பயன் போன்ற நூல்களை பதிப்பித்தார். தமிழ் மீது பெரும் பற்று பெற்ற அவர் நாலடியார், திருவாசகம் ஆகியவற்றையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்

தமிழ்நாட்டிற்கு வருகை

விவிலிய நூற்கழகத்தைச் சேர்ந்து சமயப்பணி புரிவதற்காக 1839 இல் தமிழ் நாட்டிற்கு வந்தார். கப்பலில் பயணம் செய்த எட்டு மாதங்களிலேயே தமிழை நன்கு கற்றார். தூத்துக்குடிக்கு அருகே உள்ள சாயர்புரத்தில் தங்கியிருந்த அவர் ஆரியங்காவுப் பிள்ளை , இராமானுசக் கவிராயரிடத்திலும் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றார்.அருகில் உள்ள செந்தியம்பலம் கிராமத்தை சேர்ந்த நம்மாழ்வார் என்பவர் போப் உடன் நட்பாகி ஞான சிகாமணி என்று தன் பெயரை மாற்றி கிறித்துவ ரானார். அதனால் ஒரு துவக்க பள்ளிக்கு அவர் பெயரை சூடினார் போப் . தமிழ் தவிர தெலுங்கு, மற்றும் சமஸ்கிருதம் ஆகிய மொழிகளையும் கற்றுத் தேர்ந்தார். 1850 ஆம் ஆண்டு இங்கிலாந்து சென்ற போப் அங்கு திருமணம் செய்தார். தம் மனைவியுடன் தமிழகம் திரும்பினார். எட்டு ஆண்டுகள் தஞ்சாவூரில் சமயப்பணியை தொடர்ந்தார். இந்த கால கட்டத்தில் புறநானூறு, நன்னூல், திருவாசகம், நாலடியார் போன்ற நூல்களை கற்றார். சில ஆங்கில மொழி இதழ்களில் தமிழ் குறித்த ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதினார்.

தமிழ்த் தொண்டுகள்

இங்கிலாந்து பல்கலைக்கழகம் ஒன்றில் 1885 முதல் 1908 வரை தமிழ் மற்றும் தெலுங்கு கற்பிக்கும் பேராசிரியராக

பணியாற்றினார்.
1886 ஆம் ஆண்டு திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிப்பெயர்த்தார்.
புறப்பொருள் வெண்பா மாலை, புறநானூறு, திருவருட்பயன் போன்ற நூல்களை பதிப்பித்தார்.
தமிழ் மீது பெரும் பற்று பெற்ற அவர் நாலடியார், திருவாசகம் ஆகியவற்றையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்.
இறப்புக்கு பின் தனது கல்லறையில் இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்கிக் கொண்டிருக்கிறான் என்ற வாசகம் இடம்பெற வேண்டும் என்று தனது உயிலில் கூறினார்.



உலகினில் இவர் மறைந்தாலும், தமிழுக்காக இவர் ஆற்றிய சேவை என்றும் மறையாது.. என்றுமே, நம் உள்ளங்களில் இவர் வாழ்வார்.

ஜி.யு.போப் கல்லறையில் ஸ்டாலின்

#Stalin|#GUPOpe|#Thirukkural|#Thiruvasagam|#Naladiyar
https://www.dinamalar.com/



ஜி. யு. போப் விருது (தமிழ்நாடு அரசு)

https://ta.wikipedia.org/wiki/%E0%AE%9C%E0%AE%BF._%E0%AE%AF%E0%AF%81._%E0%AE%AA%E0%AF%8B%E0%AE%AA%E0%AF%8D_%E0%AE%B5%E0%AE%BF%E0%AE%B0%E0%AF%81%E0%AE%A4%E0%AF%81_(%E0%AE%A4%E0%AE%AE%E0%AE%BF%E0%AE%B4%E0%AF%8D%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%9F%E0%AF%81_%E0%AE%85%E0%AE%B0%E0%AE%9A%E0%AF%81)

ஜி. யு. போப் விருது என்பது தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் மூலம் ஆண்டுதோறும் அளிக்கப்படும் விருதுகளில் ஒன்றாகும். 2014 ஆம் ஆண்டு முதல் இவ்விருது வழங்கப்படுகிறது. அயல்நாட்டு மொழிகளில் தமிழ் இலக்கியங்களை மொழிபெயர்க்கும் சிறந்த தமிழ் மொழிபெயர்ப்பாளருக்கு ஜி.யு.போப் விருது வழங்கப்பெற்று வருகிறது. இவ்விருதுக்கு இரண்டு இலட்சம் ரூபாய் பரிசுத் தொகையும், எட்டுக் கிராம் அளவிலான

தங்கப்பதக்கமும், தகுதிச்சான்றும் அளித்து சிறப்பிக்கப்படுகின்றனர்.

விருது பெற்றவர்கள் பட்டியல்

வரிசை எண்	விருது பெற்றவர் பெயர்	விருது வழங்கப்பட்ட ஆண்டு
1	ஜெ.நாராயணசாமி	2014
2	மதுரை இளங்கவின்	2015
3	வைதேகி ஹெர்பர்ட்	2016
4	கோ. இராசேசுவரி கோதண்டம்	2017
5	கு.கோ. சந்திரசேகரன் நாயர்	2018
6	மரிய ஜோசப் சேவியர்	2019
7	முனைவர் உல்ரீகே நிகோலசு[1]	2020
8	அ.சு. பன்னீர் செல்வன்	2021
9	முனைவர் அமுதன் அடிகள்	2022
10	முனைவர் வெ.முருகன் [2], [3]	2023

ஜி.யு.போப் 10

ராஜலட்சுமி சிவலிங்கம்

https://s-pasupathy.blogspot.com/2017/04/705-1.html



ஏப்ரல் 24. ஜி.யு.போப்பின் பிறந்த தினம்.

===

ஏராளமான தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து தமிழுக்கு அருந்தொண்டாற்றிய ஜார்ஜ் உக்லோ போப் (George Uglow Pope) பிறந்த தினம் இன்று (ஏப்ரல் 24). அவரைப் பற்றிய அரிய முத்துக்கள் பத்து:

l கனடாவின் பிரின்ஸ் எட்வர்ட் தீவில் (1820) பிறந்தவர். தந்தை வணிகர். இவர் குழந்தையாக இருந்தபோது குடும்பம் இங்கிலாந்துக்கு குடியேறியது. ஹாக்ஸ்டன் கல்லூரியில் பயின்ற பிறகு, சமயப் பணிக்காக 1839-ல் தமிழகம் வந்தார். கப்பலில் பயணம் செய்த 8 மாதங்களிலேயே தமிழை நன்கு கற்றார்.

l தூத்துக்குடி அருகே உள்ள சாயர்புரத்தில் ஆரியங்காவுப் பிள்ளை, ராமானுஜக் கவிராயரிடம் தமிழ் இலக்கண, இலக்கியங்களைக் கற்றார். தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம், மலையாளம், கன்னடம் ஜெர்மன் ஆகிய மொழிகளைக் கற்றார்.

l தஞ்சை, உதகமண்டலம், பெங்களூருவில் சமயப் பணியோடு, கல்விப் பணி, தமிழ்ப்பணியையும் மேற்கொண்டார்.

l தான் போற்றிக் கொண்டாடும் மேலைநாட்டு மெய்ஞானிகளின் வாசகங்கள் திருவாசகத்தில் இருப்பதைக் கண்டு மகிழ்ந்தார். இந்தியாவில் பல பள்ளிகளைத் திறந்து லத்தீன், ஆங்கிலம், ஹீப்ரு, கணிதம், தத்துவம் ஆகியவற்றைக் கற்பித்தார்.

l இங்கிலாந்தின் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் தமிழ், தெலுங்கு பேராசிரியராக 13 ஆண்டுகள் பணியாற்றினார். 1886-ல் தமிழில் முதுகலைப் பட்டம் பெற்றார். அதே ஆண்டில் திருக்குறளை 'Sacred Kural' என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

l புறப்பொருள் வெண்பா மாலை, புறநானூறு, திருவருட்பயன் ஆகியவற்றைப் பதிப்பித்தார். நாலடியார், திருவாசகத்தை ஆங்கிலத் தில் மொழிபெயர்த்தார். தமிழ் இலக்கணத்தை Elementary Tamil Grammar என்ற பெயரில் 3 பாகமாக எழுதினார்.

l தமிழ்ப் புலவர்கள், தமிழ்த் துறவிகள் பற்றி ஆங்கிலத்தில் நூல்கள் எழுதினார். இவரது நூல்கள் பல பதிப்புகள் வெளிவந்தன. பழைய தமிழ் நூல்களைத் தேடித் தேடிப் படித்தார். பழைய ஏட்டுச் சுவடிகளை சேகரித்தார்.

l தமிழ் இலக்கணம் மூன்று பாகங்கள் மற்றும் தமிழ் செய்யுள்களை தொகுத்து 'செய்யுள் கலம்பகம்' என்ற பெயரில் வெளியிட்டார். ராயல் ஏஷியாடிக் சொசைட்டி இவருக்கு தங்கப் பதக்கம் அளித்து சிறப்பித்தது. கணியன் பூங்குன்றனாரின் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' பாடலையும் இளம் பெருவழுதி எழுதிய 'உண்டாலம்ம இவ்வுலகம்' பாடலையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

George Uglow POPE (1820–1908)
His second wife Mrs Henrietta Page POPE, née Van Someren (1830–1911)
St Mary Magdalen section: Row 4a, Grave C58½



S. M / GEORGE UGLOW POPE, D.D.
OF S. INDIA, SOMETIME LECTURER IN TAMIL AND TELOGU, / IN THE UNIVERSITY, AND CHAPLAIN OF BALLIOL COLLEGE, OXFORD.
BORN 24 APRIL 1820, DIED 11 FEB. 1908.
THIS STONE HAS BEEN PLACED HERE BY HIS FAMILY, AND BY HIS TAMIL FRIENDS IN S. INDIA, IN LOVING ADMIRATION OF HIS LIFE-LONG LABOURS IN THE CAUSE OF ORIENTAL LITERATURE AND PHILOSOPHY.
THE LORD KNOWETH THEM THAT ARE HIS

[Other side]
IN LOVING MEMORY / ALSO OF **HENRIETTA PAGE POPE**, HIS WIFE
BORN DEC. 14 1830 / DIED AT FOREST HILL, LONDON SEP. 18, 1911

| இவர் தமிழுக்கும் சைவ சமயத்துக்கும் ஆற்றிய அருந்தொண்டு அளப்பரியது. திருவாசகம் மீதான இவரது காதல் அபரிமிதமானது. தமிழகத்தில் உள்ளவர்களுக்குக் கடிதம் எழுதும்போது முதலில் ஒரு திருவாசகப் பாடலை எழுதிவிட்டுதான் தொடங்குவார் என்று கூறப்படுகிறது. ஒருமுறை அவ்வாறு பாடல் எழுதியபோது, உள்ளம் உருகி கண்ணீர் பெருகி கடிதத்தின் மீது விழுந்தது என்பார்கள்.

| தமிழுக்குப் பெரும் தொண்டாற்றிய ஜி.யு.போப் 88 வயதில் (1908) மறைந்தார். இங்கிலாந்தின் மத்திய ஆக்ஸ்போர்டு பகுதியில் உள்ள செயின்ட் செபல்கர் தோட்டத்தில் இவரது கல்லறை உள்ளது. 'நான் ஒரு தமிழ் மாணவன்' என்று தனது கல்லறையில் பொறிக்கப்பட வேண்டும் என்று கூறியிருந்தார். ஆனால், அந்த ஆசை நிறைவேறவில்லை.

[நன்றி: http://tamil.thehindu.com]

தொடர்புள்ள பதிவு:

ஜி. யு. போப் : விக்கிப்பீடியாக் கட்டுரை

Posted by Pas S. Pasupathy at 8:34 AM

Labels: கட்டுரை, ஜி.யு.போப்

ஜி. யு. போப் (G. U. Pope) 1886-ஆம் ஆண்டு திருக்குறள் முழுவதையும் முதன்முதலாக ஆங்கிலத்தில் செய்யுள் வடிவில் மொழிபெயர்த்து வெளியிட்டார். 'தி சேக்ரட் குறள்' (The Sacred Kural) என்று பெயரிடப்பட்ட இந்த மொழிபெயர்ப்பு, உலக அரங்கில் திருக்குறளைக் கொண்டுசேர்க்கும் முயற்சியில் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க மைல்கல்லாகக் கருதப்படுகிறது.

https://tamilonline.com/thendral/article.aspx?aid=1556

முக்கிய சிறப்பம்சங்கள்:

- **முழுமையான மொழிபெயர்ப்பு:** திருக்குறளில் உள்ள 1,330 குறட்பாக்களையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.
- **செய்யுள் வடிவம்:** செய்யுள் (Poetic) நடையைப் பயன்படுத்தி, மூல நூலின் கருத்தோட்டம் சிதையாமல் ஆங்கிலத்தில் தந்தார்.
- **ஆய்வுப் பணிகள்:** மொழிபெயர்ப்போடு நில்லாமல், திருக்குறளுக்கான சிறப்பு அறிமுகம், சொல்லகராதி (Lexicon) மற்றும் ஒத்திசைவு (Concordance) ஆகியவற்றைச் சேர்த்து வெளியிட்டார்.

ஜி. யு. போப்பின் விரிவான திருக்குறள் மொழிபெயர்ப்பின் பாடல்களை முழுமையாக வாசிக்க, திட்ட மதுரை (Project Madurai) தளத்தைப் பார்வையிடலாம்.

திருக்குறள் - ஜி.யு.போப் சர்ச்சை
தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி
முன்வைத்த மொழிபெயர்ப்பு குற்றச்சாட்டு சரியா?

https://www.bbc.com/tamil/india-62691336

- எழுதியவர்,**முரளிதரன் காசிவிஸ்வநாதன்**
- பதவி,பிபிசி தமிழ்

19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஜி.யு. போப் திருக்குறளை மொழிபெயர்த்தபோது, அதிலிருந்து ஆன்மிகத்தைப் பிரித்துவிட்டார் எனக் குற்றம்சாட்டியிருக்கிறார் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி. அவருடைய இந்தப் பேச்சு வழக்கம் போலவே சர்சையை ஏற்படுத்தியிருக்கிறது.

தில்லி தமிழ் கல்விக் கழகம் நடத்தும் லோதி சாலை பள்ளியில் நிறுவப்பட்டுள்ள திருவள்ளுவர் சிலையை தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி வியாழக்கிழமையன்று திறந்துவைத்தார். அதற்குப் பிறகு திருவள்ளுவர் குறித்தும் திருக்குறள் குறித்தும் பேசிய ஆளுநர், அதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்களில் ஒருவரான ஜி.யு. போப் குறித்து கடுமையான குற்றச்சாட்டுகளை முன்வைத்தார்.

'ஆதிபகவன்' குறித்த சர்ச்சை?

"தமிழ்நாடு ஆளுநராக நான் வெளியே போகும்போதெல்லாம் எனக்கு டஜன் கணக்கில் திருக்குறள் புத்தகங்கள், அதன் மொழிபெயர்ப்பு புத்தகங்கள் வழங்கப்படும். அதில் பெரும்பாலானவை ஜி.யு. போப் உடையது. அதை படித்தபோது, ஆதிபகவன் என்ற வார்த்தையை "முதன்மை தெய்வம்" (ப்ரைமல் டெய்ட்டி) என்று ஜி.யு.போப் மொழிபெயர்த்திருப்பார்.

'ப்ரைமல் டெய்ட்டி' என்பது பழைய சமூகங்களின் சமயத்தைக் குறிக்கும். சிலவற்றை பார்த்து அந்த சமூகத்தினர் பயப்படும்போது அதை போக்க அவர்கள் தெய்வத்தை உருவாக்கினர். அதனால் அந்த வார்த்தையை பயன்படுத்தி அவர்கள் அழைக்கப்படுகின்றனர். ஆனால், ஆதிபகவன் என்பது பழம் சமூகத்தால் கருதப்பட்ட வெறும் முதன்மை தெய்வம் மட்டும் கிடையாது. அதை விட சக்தி வாய்ந்தவர் ஆதிபகவன். அவர்தான் உலகை படைத்தார்.

ஆனால், ஜி.யு.போப் தனது மொழிபெயர்ப்பில் ஒரு அவமதிப்பை செய்திருக்கிறார். அவரது மொழிபெயர்ப்பை எப்படி பிறகு வந்தவர்கள் வழிமொழிந்து சென்றனர் என்று நினைத்து அச்சரியப்படுகிறேன். ஒட்டுமொத்த திருக்குறளையும் அவர் ஆன்மிகமற்றதாக ஆக்கியிருக்கிறார். தனது மொழிபெயர்ப்பில் திருக்குறளில் இருந்த ஆன்மிக தாக்கத்தை அவர் தவிர்த்திருக்கிறார்.

- ஆளுநர் ரவி ஜி.யு. போப்பின் திருக்குறள் மொழிபெயர்ப்பு பற்றி விமர்சனம் - மீண்டும் சர்ச்சை
- திருக்குறள், திருவள்ளுவரை அரசியல் கட்சிகள், ஆளுநர் பயன்படுத்துவது ஆதாயத்துக்காகவா?
- திருவள்ளுவரின் உருவம் உருவானது எப்படி - விரிவான தகவல்

ஜி.யு. போப் யார் என்பதை உங்களுக்கு அறிமுகப்படுத்த இந்த நேரத்தை நான் பயன்படுத்திக் கொள்கிறேன். அவர் ஒரு மதபோதகர். அவர்

சுவிசேஷத்தை பரப்பும் சொசைட்டியின் (எஸ்பிஜி) உறுப்பினர். 1813இல் பிரிட்டிஷ் நாடாளுமன்றம், ஒரு சட்டத்தை இந்திய சாசனம் என்ற பெயரில் நிறைவேற்றியது. அதில், இந்தியாவில் கிறிஸ்துவ இறை நம்பிக்கையை பரப்பும் நோக்கம் வலியுறுத்தப்பட்டிருந்தது. அதன்படியே ஜி.யு.போப் இந்தியாவுக்கு ஊழியம் செய்வதற்காக வந்தார், தமிழை பயின்றார், திருக்குறளை தேர்ந்தெடுத்து அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். அதில் இருந்த ஆன்மாவை பிரித்தெடுத்தார்.

ஜி.யு.போப்பின் திருக்குறள் மொழிபெயர்ப்பை பார்த்தீர்களானால், அது ஆன்மா இல்லாத ஒரு சடலம் போல இருக்கும். தடயவியல் கூடத்தில் ஒரு உடலில் எல்லா உறுப்புகளும் இருக்கும். ஆனால், ஆன்மா இருக்காது. ஆன்மா இல்லை என்றால் உடலுக்கு அர்த்தமே கிடையாது. இதைத்தான் ஜி.யு.போப் செய்தார். அவரது மொழிபெயர்ப்பை படித்தபோது இப்படித்தான் நான் உணர்ந்தேன்.

ஜியு போப்பின் திருக்குறள் மொழிபெயர்ப்பில் 'பக்தி' மிஸ்ஸிங்.

ஆளுநர் ஆர்என் ரவி புது குற்றச்சாட்டு

https://tamil.oneindia.com/news/delhi/deliberately-missing-bhakti-in-gu-pope-tirukkural-translation-governor-rn-ravi-accused-472563.html

டெல்லி: ஜி.யு.போப்பின் திருக்குறள் மொழிபெயர்ப்பிலிருந்து பக்தி என்ற கண்ணோட்டம் நீக்கப்பட்டுள்ளது. பக்தி என்பதை வேண்டுமென்றே உள்நோக்கத்துடன் தவிர்த்துள்ளனர் என தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி கருத்து தெரிவித்துள்ளார்.



டெல்லி லோதி தோட்டத்தில் உள்ள டெல்லி தமிழ் கல்விக்கழக பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள திருவள்ளுவர் சிலையைத் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி திறந்து வைத்தார். இதனையடுத்து அவர் ஆற்றிய சிறப்புரையில் மேற்குறிப்பிட்டதைக் கூறியுள்ளார். சமீப நாட்களாக பக்தி குறித்து ஆளுநர் தனது உரையில் அடிக்கடி குறிப்பிட்டு வரும் நிலையில் தற்போதைய அவரது சிறப்புரையும் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.

தமிழ் பத்திரிகை செய்தி ஒளிபரப்பு சிலை திறப்பு டெல்லி லோதி தோட்டத்தில் உள்ள டெல்லி தமிழ் கல்விக்கழக பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள திருவள்ளுவர் சிலையைத் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி திறந்து வைத்தார். இதன் பின்னர் இந்த நிகழ்வில் சிறப்புரையாற்றிய அவர், "இந்த விழாவில் பங்கேற்பதில் மகிழ்ச்சியடைகிறேன். நமது வருங்கால தூண்களான மாணவர்களையும், அவர்களை உருவாக்கிய ஆசிரியர்களையும் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். டெல்லி தமிழ் கல்விக்கழக பள்ளிகளின் நூற்றாண்டு விழா காணுகிறது, அதற்கு வாழ்த்துகளையும், மேன்மேலும் வளரவும் வாழ்த்துகிறேன்" என்று தனது

உரையை தொடங்கினார். திருக்குறள் மேலும் தொடர்ந்து பேசிய அவர், "திருவள்ளுவர் நமது பிரபஞ்சத்தின் ஒரு விடிவெள்ளி. தற்போது திருக்குறள் என்பது ஒரு கருத்துரை, வாழ்வியல் அடங்கிய ஒரு புத்தகமாகச் சுருங்கிவிட்டதாகக் கருதுகிறேன், ஆனால் திருக்குறள் என்பது அதற்கு மேலானது. திருக்குறள் என்பது பக்தி, வாழ்வியல், பிரபஞ்சம் என அனைத்தையும் உள்ளடக்கியது. தமிழ்நாடு ஆளுநராக நான் பதவியேற்ற பின்னர் எனக்குத் திருக்குறள் புத்தகம் அதிக அளவில் பரிசாகக் கிடைத்தது. மொழிபெயர்ப்பு அதில் பெரும்பாலானது ஜி.யு.போப் என்பவரின் ஆங்கில மொழிபெயர்ப்புதான். இவரின் மொழிபெயர்ப்புதான் திருக்குறளின் சிறந்த மொழிபெயர்ப்பு. தமிழ் மொழி மற்றும் தமிழ் இலக்கியம் மிக மிகப் பழமையானது. இப்படியான பழமையான மொழியில் சுமார் 3,000 ஆண்டுகளுக்கு முன்னரே யோக கலையின் முக்கியத்துவத்தைத் தெரிவித்துள்ளனர். ஆங்கிலேயர்கள் இந்தியாவை ஒரு சந்தையாகவும், கலாச்சாரம் இல்லாத நாடாகக் காட்ட முயன்றனர். ஆனால், இந்தியா அவ்வாறு இல்லை, இந்தியா கலாச்சாரம் நிறைந்த, பண்பட்ட சமூகமாக அப்போதே இருந்துள்ளது. வேண்டும் என்று தவிர்ப்பு அதேபோல இந்திய நூல்களின் மொழிபெயர்ப்பாளர்களின் உள்நோக்கம் கொண்ட மொழிபெயர்ப்பை விடுத்து உண்மையான பொருட்களை வெளிக்கொணர வேண்டும். உதாரணமாக ஜி.யு.போப்பின் திருக்குறள் மொழிபெயர்ப்பிலிருந்து பக்தி என்ற கண்ணோட்டம் நீக்கப்பட்டுள்ளது. அனைத்துக்கும் பொதுவாகிய ஆதிபகவன் என்பதை மொழிபெயர்ப்புகளில் தவிர்த்துள்ளனர், பக்தி என்பதை வேண்டுமென்றே உள்நோக்கத்துடன் திருக்குறளிலிருந்து நீக்கப்பட்டுள்ளது"

என்று தனது உரையில் ஆளுநர் ஆர்.என்.ரவி குறிப்பிட்டுள்ளார்.

ஜி.யு.போப்

https://cdn-6.tnpsc.academy/unit/12-1-%E0%AE%9C%E0%AE%BF-%E0%AE%AF%E0%AF%81-%E0%AE%AA%E0%AF%8B%E0%AE%AA%E0%AF%8D/

இவரது பெயர் ஜார்ஜ் யுக்ளோ போப் என்பதேயாகும்.

· இதன் சுருக்கமே ஜி.யு.போப்

· பிரான்ஸ் நாட்டிலுள்ள எட்வர்ட் தீவில் ஜான் போப், கேதரின் யுளாப் என்பவர்களுக்கு மகனாகப் பிறந்தார்.

· பிறப்பு 1820 இறப்பு 1907

· இவர் தமிழகத்தில் கிருத்தவ மதத்தைப் பரப்புவதற்காக, சென்னை வருவதற்கு எடுத்துக் கொண்ட 8 மாத காலத்தில் தமிழையும் வடமொழியையும் கற்றறிந்தார்.

· முதலில் சென்னையிலும் பிறகு திருநெல்வேலி மாவட்டம் சாயர்புரத்திலும் (1842-1849) சமயப்பணி செய்துவந்தார்.

· ஏசுநாதரின் இதய ஒலி, மலை உபதேசத்தின் எதிரொலி என்று திருக்குறளைப் புகழ்ந்தார்.

· இவரது ஆசிரியர் இராமானுஜர் கவிராயர் மூலம் புறநானூறு, நன்னூல் போன்றவற்றையும் கற்றார்.

· 1950-ல் இங்கிலாந்தில் தனது திருமணம் முடிந்த பிறகு மீண்டும் தமிழகத்தில் தஞ்சாவூரில் தனது துணைவியுடன் சேர்ந்து சமயப்பணி செய்தார்.

· 1858-ல் உதகையில் பள்ளி ஒன்றை தொடங்கியதுடன் அதன் ஆசிரியராகவும் இருந்துள்ளார்.

· இவர் கணிதம், மெய்யறிவு, அறிவாய்வு முதலிய பாடங்களைக் கற்பிக்கும் கல்லூரிப் பேராசிரியராகவும் இருந்துள்ளார்.

· திருக்குறளை முழுமையாக ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

· திருவாசகம், திருவருட்பயன், சிவஞான போதம், நாலடியார், புறநானூறு, புறப்பொருள் வெண்பா மாலை, ஆகியவற்றையும் மொழி பெயர்த்துள்ளார்.

· தமிழ் செய்யுள் கலம்பகம் என்ற நூலை வெளியிட்டுள்ளார்.

· தமிழில் வரலாற்று நூல்களையும், உரைநடை நூல் ஒன்றையும் வெளியிட்டுள்ளார்.

· தமிழ் – ஆங்கில அகராதி,

· ஆங்கில – தமிழ் அகராதி என இரண்டையும் வெளியிட்டுள்ளார்.

· 1885 – 1907 வரை தமிழ் மற்றும் தெலுங்கு கற்பிக்கும் பேராசிரியராக இங்கிலாந்தில் பணியாற்றினார்.

· தமது கல்லறையில் “ஒரு தமிழ் மாணவன்” என்று எழுதி வைக்க வேண்டும் என்று கூறியவர்.

ஜி.யு.போப்பின் கல்லறைக்குப் பயணம் செய்த

புலம்பெயர் படைப்பாளர்கள்

https://ibctamil.com/article/final-wishes-unfulfilled-tomb-of-the-g-u-pope-1685435937

தமிழுக்கு மிகப்பெரிய தொண்டாற்றிய ஆங்கில / தமிழ் மற்றும் மொழியியல் மேதை அமரர். ஜி.யு.போப் அவர்களின் கல்லறைக்கு புலம்பெயர் படைப்பாளர்கள் பயணம் செய்துள்ளனர்.

கடந்த 28.05.2023 அன்று லண்டனிலிருந்து ஆறு நூல்களைப் படைத்த படைப்பாளி, பொறியியலாளர் எம்.ரி.செல்வராஜா உள்ளிட்ட புலம்பெயர் படைப்பாளர்கள் ஒக்ஸ்போட் நகரில் Walton well Road இல் இருக்கும் ஜி.யு.போப்பின் கல்லறையைக் காணச் சென்றிருந்தார்கள்.

போப்பின் இறுதி ஆசைகள்



போப் தனது நண்பருக்கு எழுதிய கடிதத்தில் இறுதி ஆசைகள் மூன்றினைத் தெரிவித்திருந்தார்.

1. **கல்லறையில் ஒரு “தமிழ் மாணவன்” என்று எழுதுங்கள்.**

2. **மொழி பெயர்த்த திருக்குறள், நாலடியார் போன்ற நூல்களைக் கல்லறையில் வையுங்கள்.**

3. **கல்லறை கட்டுவதற்கு தமிழர்கள் ஒரு சிறு உதவியேனும் செய்யுங்கள்.**

என்பவைதான் அந்தக் கோரிக்கைகள்.

படைப்பாளர்கள் வெளிப்படுத்திய ஆதங்கம்

"ஒக்ஸ்போட் நகரத்தின் பிரதான வீதியில் அந்த மயானம் அமைந்துள்ளது.

மயானத்தின் ஆரம்பத்திலேயே சுமார் எட்டாவது, ஒன்பதாவது கல்லறையாக அமரர் ஜி.யு.போப்பின் கல்லறை காணப்படுகிறது.

தனது வாழ்விலே கல்லறை பற்றிக் கனவு கண்டவரின் கல்லறை பத்தோடு பதினொன்றாக தனித்த அடையாளங்கள் எதுவுமின்றி இருப்பது எமக்கு வேதனையை அளிக்கிறது.

உலகளாவிய ரீதியிலே ஜி.யு.போப்பின் வரலாற்றைக் அறியும் போது, அவர் தம் கல்லறையில் “இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்குகிறான்” என்று எழுதப்பட்டுள்ளதாகவே கற்பிதமாகிறது, அதனையே பலரும் நம்புகிறார்கள், ஆனால் அதில் உண்மை இல்லை.



அங்கே அப்படி எதுவும் எழுதப்படவில்லை, அவருடைய இறுதி ஆசை இதுவரைக்கும் நிறைவேற்றப்படவேயில்லை.

கல்லறை சாதாரண கல்லறையாகவே காணப்படுகிறது, தமிழ் மக்களாகிய நாங்கள் ஜி.யு.போப்பின் கல்லறையில் அவர்தம் விருப்புகளைப் பதிய வேண்டியது அவசியம் என கருதுகிறோம்." என எம்.ரி.செல்வராஜா உள்ளிட்ட குழுவினர் கவலை வெளியிடுகின்றனர்.







அப்டியா?

ஜி. யு. போப்

வாழ்க்கைச் சுருக்கம்

https://apdiya.blogspot.com/2016/12/g-u-pope.html



G.U. Pope

கனடாவின் பிரின்ஸ் எட்வெர்ட் தீவில்) என்னுமிடத்தில் ஜான் போப், காதரீன் யூக்ளோ போப் ஆகியோருக்கு பிறந்தார் போப். ஜீயார்ஜ் யூக்ளோ என்பது போப்பின் இயற்பெயர்.[1] தந்தையாரின் வாணிபத்திற்காக எட்வர்ட் தீவு சென்றிருந்த குடும்பம், போப்பின் குழந்தைப் பருவத்திலேயே 1826 ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு குடும்பத்துடன் திரும்பியது. 19 வயது வரை ஹாக்ஸ்டன் கல்லூரியில் கல்வி பயின்றார்.

இங்கிலாந்து பல்கலைக்கழகம் ஒன்றில் 1885 முதல் 1908 வரை தமிழ் மற்றும் தெலுங்கு கற்பிக்கும் பேராசிரியராகப் பணியாற்றினார். 1886 ஆம் ஆண்டு திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். புறப்பொருள் வெண்பா மாலை, புறநானூறு, திருவருட்பயன் போன்ற நூல்களை பதிப்பித்தார். தமிழ் மீது பெரும் பற்று கொண்ட இவர் நாலடியார், திருவாசகம் ஆகியவற்றையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்.

தமிழ்நாட்டிற்கு வருகை

விவிலிய நூற்கழகத்தைச் சேர்ந்து சமயப்பணி புரிவதற்காக 1839 இல் தமிழ் நாட்டிற்கு வந்தார். கப்பலில் பயணம் செய்த எட்டு மாதங்களிலேயே தமிழை நன்கு கற்றார்.

சென்னைக்கு வந்த போப் சாந்தோம் பகுதியில் தங்கினார். வெஸ்லியன் சங்கம் சார்பாக சென்னை வந்த போப், சென்னையில் இங்கிலாந்து திருச்சபையில் சேர்ந்தார். அங்கு 'குரு' பட்டம் பெற்றார். எஸ். பி. ஜி எனும் நற்செய்திக் கழகத்தின் தொண்டராக ஏற்றுக் கொள்ளப்பட்டார். அச்சங்கத்தால் சாயர்புரம் சிற்றூருக்கு சமயத்தொண்டுக்காக அனுப்பி வைக்கப்பட்டார்

கனடாவின் பிரின்ஸ் எட்வர்ட் தீவில் (1820) பிறந்தவர். தந்தை வணிகர். இவர் குழந்தையாக இருந்தபோது குடும்பம் இங்கிலாந்துக்கு குடியேறியது. ஹாக்ஸ்டன் கல்லூரியில் பயின்ற பிறகு, சமயப் பணிக்காக 1839-ல் தமிழகம் வந்தார். கப்பலில் பயணம் செய்த 8 மாதங்களிலேயே தமிழை நன்கு கற்றார்.

தூத்துக்குடி அருகே உள்ள சாயர்புரத்தில் ஆரியங்காவுப் பிள்ளை, ராமானுஜக் கவிராயரிடம் தமிழ் இலக்கண, இலக்கியங்களைக் கற்றார். தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம், மலையாளம், கன்னடம் ஜெர்மன் ஆகிய மொழிகளைக் கற்றார்.

தஞ்சை, உதகமண்டலம், பெங்களூருவில் சமயப் பணியோடு, கல்விப் பணி, தமிழ்ப்பணியையும் மேற்கொண்டார்.

தான் போற்றிக் கொண்டாடும் மேலைநாட்டு மெய்ஞானிகளின் வாசகங்கள் திருவாசகத்தில் இருப்பதைக் கண்டு மகிழ்ந்தார். இந்தியாவில் பல பள்ளிகளைத் திறந்து லத்தீன், ஆங்கிலம், ஹீப்ரு, கணிதம், தத்துவம் ஆகியவற்றைக் கற்பித்தார்.

இங்கிலாந்தின் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் தமிழ், தெலுங்கு பேராசிரியராக 13 ஆண்டுகள் பணியாற்றினார். 1886-ல் தமிழில் முதுகலைப் பட்டம் பெற்றார். அதே ஆண்டில் திருக்குறளை 'Sacred Kural' என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

புறப்பொருள் வெண்பா மாலை, புறநானூறு, திருவருட்பயன் ஆகியவற்றைப் பதிப்பித்தார். நாலடியார், திருவாசகத்தை ஆங்கிலத் தில் மொழிபெயர்த்தார். தமிழ் இலக்கணத்தை Elementary Tamil Grammar என்ற பெயரில் 3 பாகமாக எழுதினார்.

தமிழ்ப் புலவர்கள், தமிழ்த் துறவிகள் பற்றி ஆங்கிலத்தில் நூல்கள் எழுதினார். இவரது நூல்கள் பல பதிப்புகள் வெளிவந்தன. பழைய தமிழ் நூல்களைத் தேடித் தேடிப் படித்தார். பழைய ஏட்டுச் சுவடிகளை சேகரித்தார்.

தமிழ் இலக்கணம் மூன்று பாகங்கள் மற்றும் தமிழ் செய்யுள்களை தொகுத்து `செய்யுள் கலம்பகம்' என்ற பெயரில் வெளியிட்டார். ராயல் ஏஷியாடிக் சொசைட்டி இவருக்கு தங்கப் பதக்கம் அளித்து சிறப்பித்தது. கணியன் பூங்குன்றனாரின் `யாதும் ஊரே யாவரும் கேளிர்' பாடலையும் இளம் பெருவழுதி எழுதிய `உண்டாலம்ம இவ்வுலகம்' பாடலையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

இவர் தமிழுக்கும் சைவ சமயத்துக்கும் ஆற்றிய அருந்தொண்டு அளப்பரியது. திருவாசகம் மீதான இவரது காதல் அபரிமிதமானது. தமிழகத்தில் உள்ளவர்களுக்குக் கடிதம் எழுதும்போது முதலில் ஒரு திருவாசகப் பாடலை எழுதிவிட்டுதான் தொடங்குவார் என்று கூறப்படுகிறது. ஒருமுறை அவ்வாறு பாடல் எழுதியபோது, உள்ளம் உருகி கண்ணீர் பெருகி கடிதத்தின் மீது விழுந்தது என்பார்கள்.

தமிழுக்குப் பெரும் தொண்டாற்றிய ஜி.யு.போப் 88 வயதில் (1908) மறைந்தார். இங்கிலாந்தின் மத்திய ஆக்ஸ்போர்டு பகுதியில் உள்ள செயின்ட் செபல்கர் தோட்டத்தில் இவரது கல்லறை உள்ளது.

மூன்று இறுதி விருப்பங்கள்

முதுமையில் தளர்ச்சியடைந்த சமயம் தமது நண்பரிடம் மூன்று விருப்பங்களைத் தெரிவித்திருந்தார் ஜி.யு.போப்.

1. இறப்புக்கு பின் தனது கல்லறையில் இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்கிக் கொண்டிருக்கிறான் என்ற வாசகம் இடம்பெற வேண்டும். (அவரது உயிலிலோ அவரது கல்லறையிலோ அத்தகைய கருத்து சேர்க்கப்படவில்லை).

2. தமது கல்லறைக்குச் செலவிடும் தொகையில் ஒரு சிறுபகுதியாவது தமிழ் மக்களின் நன்கொடையால் அமைய வேண்டும். பச்சையப்பன் கல்லூரித் தமிழ் பேராசிரியர் செல்வக் கேசவராயர் தமிழன்பர்களிடம் நன்கொடை திரட்டி இங்கிலாந்துக்கு அனுப்பி வைத்தார்.

3. கல்லறையில் தம்மை அடக்கம் செய்யும் போது தான் மொழிபெயர்த்து வெளியிட்ட திருக்குறள் மற்றும் திருவாசத்தையும் உடன் வைக்க வேண்டும் என்பது.

ஜி.யு.போப் கல்லறைக்கு ஒரு நேரடி விசிட் ! அசந்துபோன ஐ.ஏ.எஸ் அதிகாரி

https://tamil.oneindia.com/news/london/a-live-visit-to-g-u-pope-memorial-this-is-what-surprised-ias-officer-474027.html

லண்டன்: ஜி.யு,போப் பற்றியும் அவர் மொழிபெயர்த்த திருக்குறள் மொழிபெயர்ப்பு குறித்தும் தமிழ்நாட்டில் பரவலாக விவாதிக்கப்படுகிறது. அதற்குக் காரணம் ஆளுநர் ரவி. இவரது கருத்துக்கு திமுகவினர் மிகக் கடுமையாக எதிர்வினையாற்றி வருகின்றனர். இந்த நிலையில் திராவிட நாகரிகம் குறித்து ஆய்வு செய்து வரும் ஆர்.பாலகிருஷ்ணன் ஐ.ஏ.எஸ். இங்கிலாந்து சென்றுள்ளார். அப்போது ஜி.யு.போப் கல்லறைக்கு ஒரு விசிட் அடித்துள்ளார். அந்த அனுபவம் குறித்து அவரிடம் பேசினோம்.



ஆச்சரியம் தந்த சந்திப்பு "கடந்த மே மாதம்தான் இங்கிலாந்தில் ஆக்ஸ்போர்டு நகருக்குப் போயிருந்தேன். அங்குள்ள ஜெரிக்கோ பகுதியில் ஒரு கடைக்குச் சென்று விட்டுத் தங்கியிருந்த அறைக்குத் திரும்பிக் கொண்டிருந்தேன். தினமும் அந்த வழியாகத்தான் வருவேன். அன்றும் அப்படித்தான் வந்தேன். சாலையில் நின்றிருந்த ஒருவர், "வணக்கம்" என்றார். பக்கத்தில் ஒலித்த தமிழ்க்குரல் கேட்டு நிமிர்ந்து பார்த்தேன். எதிரில் நின்றவர் செலின் ஜார்ஜ். அவரை எனக்கு முன்பே தெரியும். குமரிமாவட்டத்தில் கல்லுக்கூட்டம் என்ற ஊரைச் சேர்ந்தவர். மென்பொருள் துறையில் பணியாற்றி வருகிறார்.





இலண்டன் பல்கலைக்கழக தமிழ்த்துறை பரப்புரைக் குழுவில் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டு வருகிறார். அவர்தான் ஆக்ஸ்போர்டு சாலையில் என்னை எதேச்சையாகப் பார்த்து அடையாளம் கண்டுபிடித்துவிட்டார். எனக்கு வியப்பும் மகிழ்ச்சியுமாக இருந்தது. யார் இந்த ஜி.யு,போப்? நான் அவரை விசாரித்தேன். அவர், 'ஜி.யு. போப் கல்லறையைப் பார்க்க கனடிய தமிழ் இருக்கை தலைவர் சிவன் இளங்கோ இன்னும் கொஞ்ச நேரத்து வர இருக்கிறார். ஆகவே காத்திருக்கிறேன்.அது தொடர்பாகத்தான் ஆக்ஸ்போர்டு வந்திருக்கிறேன்" என்றார். உடனே நான் ஆச்சரியமான தொனியில் "ஜி.யு. போப் கல்லறை எங்கே இருக்கிறது"? என்று கேட்டேன். நான் ஒரு தமிழ் மாணவன். போப்பையும் திருக்குறளையும் கூர்ந்து படித்தவர். தமிழ் பண்பாடு, நாகரிகம் எனத் தொடர்ந்து ஆய்வு செய்து வருபவன். ஆகவே அந்தக் கேள்வியை சட்டென்று கேட்டேன். அவர் இன்னும் வியப்பை அதிகமாக்கும் தொனியில், "கல்லறைத் தோட்டத்தின் நுழைவாயிலில்தான் நாம் இருவரும் இப்போது நிற்கிறோம்" என்றார். நான் தினம் கடக்கும் சாலை அது. ஆனால் அந்தச் செய்தி எனக்குத்


தெரியவில்லை. அடுத்த நிமிடமே போய் பார்ப்பது என முடிவு செய்தேன்.


அவர் எதிர் பார்த்துக் காத்திருந்த, சிவன் இளங்கோவும் லண்டனைச் சேர்ந்த சிவலீலனும் அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தனர். உடனே நாங்கள் நால்வரும் ஜி.யு போப் கல்லறைக்கு சென்றோம். ஜி.யு,போப்பை வணங்கினோம். நிறைய புகைப்படம் எடுத்துக் கொண்டோம். தவிர்க்க முடியாமல் சென்னை மெரினாவில் உள்ள ஜி.யு. போப் சிலை எனக்கு நினைவுக்கு வந்தது. தமிழுக்கு உண்மையில் தொண்டாற்றிய எவரையும் தமிழ் கூறும் நல்லுலகம் மறந்ததே இல்லை. அதனால்தான் தொன்மையான தமிழ்மொழி இன்றும் இளமையாய் இருக்கிறது. ஆக்கப்பூர்வமான நேர்மறையான உணர்வுகளில் தலையானது நன்றியுணர்வுதான். அந்த உணர்வு தமிழர்களிடம் நிறையவே இருக்கிறது. ஜி. யு. போப் (George Uglow Pope, ஏப்ரல் 24, 1820 - பெப்ரவரி 11, 1908) கனடாவில் பிறந்து கிறிஸ்தவ சமய போதகராகத் தமிழ் நாட்டிற்கு வந்து 40 ஆண்டுக் காலம் தமிழுக்குச் சேவை செய்தவர். திருக்குறள், நாலடியார், திருவாசகம் ஆகிய நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர். தூத்துக்குடி அருகே சாயர்புரம், தஞ்சாவூர்,உதக மண்டலம் ஆகிய இடங்களில் இறைப்பணி, கல்விப்பணி, தமிழ்ப்பணி ஆற்றியவர். ஜி.யு.போப்புக்கு பிறந்த ஊரில் சிலை இங்கிலாந்திலுள்ள ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் 1885 முதல் 1908 வரை தமிழ் மற்றும் தெலுங்கு கற்பிக்கும் பேராசிரியராகப் பணியாற்றினார். ஆக்ஸ்போர்டில் 1908 ஆம் ஆண்டு காலமானார். அங்கு தான் அவரது கல்லறை உள்ளது.

கனடாவில் ஜி.யு போப் பிறந்த ஊரில் அவருக்கு நினைவுச்சின்னம் அமைக்க வேண்டும் என்று கனடா தமிழர்களிடம் ஒரு திட்டம் இருக்கிறது. இந்தப் பின்னணியில் தான் சிவன் இளங்கோ ஆக்ஸ்போர்டில் உள்ள போப் கல்லறையை பார்க்க வந்திருக்கிறார். அவர்களின் அழைப்பால் நானும் போப் கல்லறையைப் பார்க்க முடிந்தது. என் வாழ்நாளில் மறக்க முடியாத நிகழ்வு இது. போப் கல்லறையிலிருந்து சில நூறு மீட்டர் தூரத்தில்தான் தங்கியிருந்தேன் என்பதே எனக்கு தெரியாது. அதாவது செலின் ஜார்ஜ் என்னைச் சாலையில் அடையாளம் கண்டு தடுத்து நிறுத்தும் வரையில். அதற்கு பின்னர் ஒரு நாள் எனது மனைவி, மகள்கள், பேத்தியுடன் ஜி.யு போப் கல்லறைக்கு மறுபடியும் சென்றேன். ஜி.யு போப் கால்டுவெல் வீரமாமுனிவர் போன்றோரின் தமிழ்ப்பணி பற்றி எனது குடும்பத்ினருக்கு எடுத்து விளக்கினேன்" என்கிறார் ஆய்வாளர் ஆர். பாலகிருஷ்ணன். தமிழ் படித்த மாணவன் போப் கல்லறையில் 'நான் ஒரு தமிழ் மாணவன்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளதாக பலகாலமா ஒரு நம்பிக்கை தமிழ்நாட்டில் நிலவுகிறது. நீங்கள் பார்த்த கல்லறையில் அந்த வாசகம் இருந்ததா? என்ற கேள்வியை முன்வைத்தோம். "அவரது கல்லறையில் அப்படி எழுதப்படவில்லை. ஆனால் அவர் இறப்பதற்கு முன்பு நெருக்கமான நபர்களிடம் அந்த விஷயத்தை முன்வைத்துள்ளார். முறைப்படி அவரது உயிலில் அப்படி எதுவும் கூறப்படாததால் எழுதப்படவில்லை" எனக் கூறும் பாலகிருஷ்ணன், தனக்கு ஜி.யு.போப் மீது நம்பிக்கை உள்ளது. அவரது தமிழ்ப் பற்றை சந்தேகிக்க முடியாது. போப் உள்ளுணர்வு உண்மையானது என்கிறார்.

















கருஞ்சட்டைத் தமிழர்

ஜி.யூ.போப்

எழில்.இளங்கோவன்

https://www.keetru.com/index.php/2009-11-06-11-47-46/3690-karunchattai-dec-2017/34326-2017-12-19-10-45-40

ஏப்ரல் 24ஆம் நாள் 1820ஆம் ஆண்டு, கனடா நாட்டின் பிரின்ஸ் எட்வர்ட் தீவில் பிறந்தார் ஜி.யூ.போப். இவரின் பெயர் (Georg Uglow) ஜார்ஜ் யூக்லோ.

இவரின் தாயார் கேதரின் யூக்ளோ. தந்தை ஜான்போப்.

1826ஆம் ஆண்டு, இவர்கள் குடும்பம் கனடாவில் இருந்து இங்கிலாந்தில் குடியேறியது. அப்போது ஜி.யூ.போப்பின் வயது 6.

இங்கிலாந்தில் ஹாக்ஸ்டன் கல்லூரியில் பயின்ற இவர், தன் 19ஆம் வயதில் 1839 ஆம் ஆண்டில் தமிழகம் வந்தார்- கப்பல் மூலமாக.

இலண்டன் பைபிள் சங்கத்தில் சேர்ந்து, கிருத்துவ சமயப் பணிக்காக வந்த போப் சென்னை சாந்தோமில் தங்கினார்.

சென்னையில் இருந்த இங்கிலாந்து, கிருத்துவத் திருச்சபையில் சேர்ந்து, அங்கு ‘குரு’ பட்டம் பெற்றார். பின்னர் சமயப்பணி ஆற்றும் பொருட்டு இவர், தூத்துக்குடி அருகில் உள்ள சாயர்புரம் என்ற சிற்றூருக்குச் சென்றார்.

அங்கே இராமானுஜக் கவிராயரிடமும், ஆரியங்காவுப் பிள்ளையிடமும் தமிழ் இலக்கிய இலக்கணங்களைத் திரிபறக் கற்றார். இத்துடன் தெலுங்கு, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளையும் கற்றுத் தேர்ந்தார்.

1850ஆம் ஆண்டு இங்கிலாந்து திருப்பிய போப் அங்கு திருமணம் செய்து கொண்டு தமிழகம் வந்தபோது, அவர் நேராகத் தஞ்சாவூர் சென்று அங்கு தங்கிச் சமயப்பணி ஆற்றத் தொடங்கினார்.

அங்கு இவர் சமயப்பணி ஆற்றிக் கொண்டு இருந்த நிலையில், இவருக்கு முன் ஒரு பிரச்சனை உருவெடுக்கத் தொடங்கியது.

ஏற்கனவே அங்கு இருந்த கிருத்துவர்களும், ஜி.யூ.போப் சமயப்பணியால் கிருத்துவர்களாக ஆக்கப் பட்டவர்களும் போப்பிடம் ஒரு வேண்டுகோளை முன்வைத்தனர்.

அதாவது தாங்கள் கிருத்துவர்களாக மாறும்முன் இந்து உயர்சாதியினராக இருந்தவர்கள். இப்பொழுது கிருத்துவர்களாக மாறி இருக்கிறார்கள்.

ஆகவே இவர்களுக்கு உயர் சாதிய முன்னுரிமை அங்கீகாரம் வழங்கவேண்டும் என்றும் தாழ்த்தப்பட்ட பிற மதம் மாறிய கிருத்துவ மக்களை இவர்களுக்கு இணையாக வைக்கக் கூடாது என்றும் இவர்கள் கோரினார்கள்.

இந்த சாதிய வர்ணாசிரமக் கோரிக்கை கிருத்துவ மதத்திற்குள் நுழைவதை விரும்பாத ஜி.யூ.போப் அவர்களின் கோரிக்கையை ஏற்க மறுத்துவிட்டார்.

இறைவனின் முன் அனைத்து மக்களும் சமமானவர்களே. சாதியை வைத்து உயர்வு தாழ்வு பார்ப்பதை நான் ஒருபோதும் அங்கீகரிக்கமாட்டேன் என்று உறுதியாய்ச் சொல்லிவிட்டார்.

ஆனால் அவருக்கு மேலிருந்த கிருத்துவச் சபையின் தலைமை, உயர்சாதிக் கிருத்துவர்கள் பக்கம் சார்ந்து நின்றது.

சபைத் தலைமையின் இச் சாதியச் சார்பு நிலையை ஏற்க மறுத்த போப் அவர்கள், தலைமைச் சபைக்கு எதிராக வைத்த கருத்துகள் பயனற்றுப் போயின.

எனவே 16 ஆண்டுகள் தஞ்சையில் சமயப் பணி செய்த அவர், அச்சபையில் இருந்து விலகல் கடிதம் கொடுத்துவிட்டு தன் குடும்பத்துடன் உதகமண்டலம் சென்றார்.

அங்கு ஐரோப்பிய மாணவர்களுக்கு பாடங்கள் எடுத்தார். தமிழ் கற்றுக் கொடுக்கத் தொடங்கினார். அங்கு சமயப் பணிகளையும் செய்யத் தவறவில்லை அவர்.

உதகையில் பலரைச் சந்தித்து, ஒரு கூட்டு முயற்சியில் ஒரு பள்ளிக்கூடத்தை நிறுவினார் ஜி.யூ.போப்.

அத்தோடு பழைய தமிழ் நூல்களைத் தேடிப் படித்தார். தமிழ் ஓலைச் சுவடிகளைத் தேடிச் சேகரித்த அவர் அவைகளை ஆய்வு செய்யவும் தொடங்கினார்.

இவரின் சமயப்பணியுடன் இணைந்த கல்விப் பணிக்காக இங்கிலாந்து கிருத்துவத் திருச்சபை இவருக்கு 'மறை நூல் புலவர்' என்ற பட்டத்தை வழங்கியது.

பின்னர் உதகையில் இருந்து 1871ஆம் ஆண்டு பெங்களூர் சென்று சமய, கல்விப் பணியை பதினொரு ஆண்டுகள் தொடர்ந்து செய்தார்.

அவரின் 62ஆம் வயதில் ஏற்பட்ட உடல் நலக்குறைவு காரணமாக 1882 ஆம் ஆண்டு அவர் இங்கிலாந்து திரும்பினார்.

இங்கிலாந்து ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் 1885 முதல் 1908ஆம் ஆண்டு வரை பேராசிரியராகப் பணியாற்றினார். அப்பொழுது ஆங்கிலேய மாணவர்களுக்குத் தமிழ் மொழிப் பாடங்களைப் பயிற்றுவித்துள்ளார்.

1886ஆம் ஆண்டு திருக்குறளை 'ஷிணீநீகூஷீமீபீ ரிUகூஷீணீறீ' என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டார்.

புறநானூறு, புறப்பொருள் வெண்பாமாலை நாலடியார் ஆகிய இலக்கிய நூல்களின் பாடல்கள் சிலவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து இதழ்களில் பதிப்பித்து இருக்கிறார்.

திருவருட்பா, தேவாரம் ஆகிய நூல்களையும் மொழிபெயர்த்துள்ளார். சிவஞானபோதத்தைப் படித்த ஜி.யூ.போப் அவர்கள், அதனை முழுமையாக மொழிபெயர்க்க விரும்பி இருந்தார். ஆனால் சில பாடல்கள் மொழி பெயர்ப்புடன் அப்பணி முற்றுப் பெறமல் போய்விட்டது எனத் தெரிகிறது.

தமிழ் இலக்கணங்களுடன், செய்யுள்களைத் தொகுத்துச் 'செய்யுள் கலம்பகம்' என்ற நூலைத் தொகுத்தெழுதி இவரே அதை வெளியிட்டுள்ளார்.

கணியன் பூங்குன்றனாரின் “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்ற பாடலையும், புலவர் இளம்பெருவழுதியின் “உண்டாலம்ம இவ்வுலகம்” என்ற பாடலையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த இவர், அதை அச்சிலும் கொண்டுவந்துள்ளார்.

ஜி.யூ.போப் அவர்களின் தமிழ்ப் பணியினைப் பாராட்டி இராயல் எசியாடிக் சொசைட்டி இவருக்குத் தங்கப் பதக்கம் வழங்கிப் பெருமைப் படுத்தி இருக்கிறது.

ஜி.யூ.போப் எழுதிய சில நூல்கள்

1. தமிழ்ச் செய்யுள் கலம்பகம்

2. Extracts from Puranaanooru to Purapporul Venbaa malai

3. Elementary Tamil Grammer

4. The Lives of Tamil Siants

இதழ்கள்

1. Royal Asiatic Quarterly, 2. The Indian Magazine, 3. Siddhantha Deepika

ஜி.யூ.போப் தன் மரணத்திற்கு முன்னர் மூன்று விருப்பங்களைப் பதிவு செய்திருத்திருக்கிறார்.

1. தன் கல்லறைக்குச் செலவிடும் தொகையில் ஒரு சிறு தொகை தமிழ் மக்களின் நன்கொடையாக இருக்கவேண்டும் என்று விரும்பினர். போப்பின் மரணத்தை அடுத்து, பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியர் செல்வக் கேசவனார் தமிழ் அன்பர்களிடம் நன்கொடை பெற்று அதை இங்கிலாந்துக்கு அனுப்பியுள்ளார்.

2. தன் கல்லறையில் தன் உடலுடன் தன்னால் மொழி பெயர்க்கப்பட்ட திருக்குறள், திருவாசகம் இரண்டையும் வைத்து அடக்கம் செய்ய வேண்டும்.

3. “இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்கிக்கொண்டு இருக்கிறான்” என்று தன் கல்லறைமீது பொறிக்க வேண்டும் என்று விரும்பினார். ஆனால் இந்த கடைசி ஆசை நிறைவேறவே இல்லை.

அவரின் கல்லறையில் மேற்சொன்ன வாசகம் எழுதப்படவில்லை.

1908 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 12ம் நாள் தன் 88ஆம் வயதில் பெருந்தகை ஜி.யூ.போப் ‘தமிழ் மாணவனாகவே’ தன் நெடிய துயிலை ஏற்றுக்கொண்டார்& -இங்கிலாந்து மத்திய ஆக்ஸ்போர்ட் பகுதியில் உள்ள செயின்ட் செபல்கரிஸ் கல்லறையில்.

மறைவு

1. **இறப்புக்குப் பின் தனது கல்லறையில் இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்கிக் கொண்டிருக்கிறான் என்ற வாசகம் இடம்பெற வேண்டும் (அவரது உயிலிலோ அவரது கல்லறையிலோ அத்தகைய கருத்து சேர்க்கப்படவில்லை).**
2. **தமது கல்லறைக்குச் செலவிடும் தொகையில் ஒரு சிறுபகுதியாவது தமிழ் மக்களின் நன்கொடையால் அமைய வேண்டும்.**
3. **கல்லறையில் தம்மை அடக்கம் செய்யும் போது தான் மொழிபெயர்த்து வெளியிட்ட திருக்குறள் மற்றும் திருவாசகத்தையும் உடன் வைக்க வேண்டும்**

என்ற மூன்று விருப்பங்களை ஜி.யு.போப் நண்பரிடம் தெரிவித்திருந்தார்.

ஜி.யு.போப் பிப்ரவரி 11, 1908 அன்று காலமானார்.

போப் அவர்களின் விருப்பப்படி அவர் கல்லறையை அமைக்க பச்சையப்பன் கல்லூரி தமிழ் பேராசிரியர் செல்வக்கேசவராய முதலியார் தமிழர்களிடம் நன்கொடை வசூலித்து இங்கிலாந்துக்கு அனுப்பிவைத்தார். ஆக்ஸ்போர்டில் வால்டன் தெரு என்ற வீதியில் உள்ள கல்லறைத்தோட்டத்தில் ஒரு மரத்தடியில் சலவைக்கல்லால் ஆன போப் கல்லறை உள்ளது. அதில் பொறிக்கப்பட்டு உள்ள ஆங்கில வாசகத்தின் தமிழாக்கம்:

"தென்னிந்தியாவை சேர்ந்த ஜார்ஜ் உக்ளோ போப் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் தமிழ், தெலுங்கு மொழிகளை போதிக்கும் பேராசிரியராக பணியாற்றினார். மொழிக்காகவும், சமயப்பணிக்காகவும்

வாழ்நாள் முழுவதும் பாடுபட்ட போப் மீது பற்றுதல் கொண்ட தென்னிந்தியாவை சேர்ந்த அவருடைய தமிழ் அன்பர்களும், அவருடைய குடும்பத்தினரும் சேர்ந்து அமைத்த கல்லறை இது"

G.U. Pope's English Translation of Thirukural

Gomathi Batumalai1
Dr Manimangai Mani2
Dr Veeramohan Veeraputhran

https://ejournal.um.edu.my/index.php/tamilperaivu/article/view/46177/16051

Abstract

Thirukural is one of the most popular Tamil literary works to date. Thiruvalluvar's Thirukural, also known as Ulagapothumarai, Poiyamozhi, Muppaal, and so on, is widely used by people worldwide. Thirukural showcases life concepts and has been translated into more than 40 languages partially and wholly by more than 60 scholars. These translations have delivered Thirukural to the entire world. This study is about G.U. Pope's English translation of Thirukural. The eminent British scholar and linguist G.U. Pope, abbreviated from George Uglow Pope, made substantial contributions to Tamil literature and culture. The English translation of the Thirukural, a masterwork of Tamil literature credited to the ancient poet Thiruvalluvar, is one of his most illustrious works. This study mainly identifies and analyses the strength and weaknesses of G.U.Pope's translation of Thirukural. Data has been collected and textually analysed using Newmark Translation Theory (1988). This analysis found that the English translation of Thirukural by G.U. Pope is mostly accurate, with few inaccuracies in certain components. Thus, an accurate translation of literature from a source text to a targeted language brings the beauty and message of the literature to the audience.

Keywords: Thirukural, translation, G.U.Pope, English, accuracy

ஜி. யு. போப்

HTTPS://TELIBRARY.COM/G-U-S-POPE/



ஜி. யு. போப் (George Uglow Pope, ஏப்ரல் 24, 1820 – பெப்ரவரி 11, 1908) கனடாவில் பிறந்து கிறிஸ்தவ சமய போதகராக தமிழ் நாட்டிற்கு வந்து 40 ஆண்டு காலம் தமிழுக்கு சேவை செய்தவர். திருக்குறள், நாலடியார், திருவாசகம் ஆகிய நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்.

வாழ்க்கைச் சுருக்கம்

கனடாவின் பிரின்ஸ் எட்வெர்ட் தீவில் ஜான் போப், காதரீன் யூக்ளோ போப் ஆகியோருக்கு பிறந்தார் போப். ஜீயார்ஜ் யூக்ளோ என்பது போப்பின் இயற்பெயர். தந்தையாரின் வாணிபத்திற்காக எட்வர்ட் தீவு சென்றிருந்த குடும்பம், போப்பின் குழந்தைப் பருவத்திலேயே 1826 ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு குடும்பத்துடன் திரும்பியது. 19 வயது வரை ஹாக்ஸ்டன் கல்லூரியில் கல்வி பயின்றார்.

இங்கிலாந்து பல்கலைக்கழகம் ஒன்றில் 1885 முதல் 1908 வரை தமிழ் மற்றும் தெலுங்கு கற்பிக்கும் பேராசிரியராகப் பணியாற்றினார். 1886 ஆம் ஆண்டு திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். புறப்பொருள் வெண்பா மாலை, புறநானூறு, திருவருட்பயன் போன்ற நூல்களை பதிப்பித்தார். தமிழ் மீது பெரும் பற்று கொண்ட இவர் நாலடியார், திருவாசகம் ஆகியவற்றையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்.

தமிழ்நாட்டிற்கு வருகை

விவிலிய நூற்கழகத்தைச் சேர்ந்து சமயப்பணி புரிவதற்காக 1839 இல் தமிழ் நாட்டிற்கு வந்தார். கப்பலில் பயணம் செய்த எட்டு மாதங்களிலேயே தமிழை நன்கு கற்றார்.

சென்னைக்கு வந்த போப் சாந்தோம் பகுதியில் தங்கினார். வெஸ்லியன் சங்கம் சார்பாக சென்னை வந்த போப், சென்னையில் இங்கிலாந்து திருச்சபையில் சேர்ந்தார். அங்கு 'குரு' பட்டம் பெற்றார். எஸ். பி. ஜி எனும் நற்செய்திக் கழகத்தின் தொண்டராக ஏற்றுக் கொள்ளப்பட்டார். அச்சங்கத்தால் சாயர்புரம் சிற்றூருக்கு சமயத்தொண்டுக்காக அனுப்பி வைக்கப்பட்டார்.

சாயர்புரத்தில்

தூத்துக்குடிக்கு அருகே உள்ள சாயர்புரத்தில் தங்கியிருந்த அவர் ஆரியங்காவுப் பிள்ளை , இராமானுசக் கவிராயரிடத்திலும் தமிழ் இலக்கண இலக்கியங்களைக்கற்றார். அருகில் உள்ள செந்தியம்பலம் கிராமத்தை சேர்ந்த நம்மாழ்வார் என்பவர் போப் உடன் நட்பாகி ஞான சிகாமணி என்று தன் பெயரை மாற்றி கிறித்துவரானார். அதனால் ஒரு துவக்க பள்ளிக்கு அவர் பெயரை சூடினார் போப். தமிழ் தவிர தெலுங்கு, மற்றும் சமஸ்கிருதம் ஆகிய மொழிகளையும் கற்றுத் தேர்ந்தார்.

போப்பின் சாயர்புர பணி சமயப்பணி, கல்விப்பணி என இரு பகுதிகள் கொண்டது.

1849 ஆம் ஆண்டு திருமணம் செய்துகொண்ட போப் பின் இங்கிலாந்து சென்றார்.

தஞ்சாவூரில்

1851 ஆம் ஆண்டு தன் மனைவியுடன் தமிழகம் திரும்பினார். எட்டு ஆண்டுகள் தஞ்சாவூரில் சமயப்பணியை தொடர்ந்தார். இந்த கால கட்டத்தில் புறநானுறு, நன்னூல், திருவாசகம், நாலடியார் போன்ற நூல்களை கற்றார். சில ஆங்கில மொழி இதழ்களில் தமிழ் குறித்த ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதினார்.

போப்பின் தஞ்சாவூர் பணி சமயப்பணி, கல்விப்பணி, தமிழ்ப்பணி என முப்பரிமாணம் கொண்டது.

உதகமண்டலத்தில்

தஞ்சையில் கிறித்துவத்திற்கு மதம் மாறிய பின்னர் சாதி உயர்வு தாழ்வுகளை மறக்காத உயர் சமூகத்தைச் சேர்ந்தோராகக் கருதப்பட்டோர் தங்களுக்கு

முதலிடம் கேட்டனர். போப் இறைவன் முன்னிலையில் அனைவரும் சமம் என்றார். அவரது கருத்து முதலிடம் கேட்டோரால் ஏற்கப்படவில்லை. கிறித்துவ சபையான நற்செய்திக் கழகத்தாரும் உயர் சமூகத்தைச் சேர்ந்தோராகக் கருதப்பட்டவர்களைச் சார்ந்து நின்றதால், போப் தமது 16 வருட நற்செய்திக் கழகத் தொண்டர் பணியிலிருந்து விலகி கிறித்துவ சங்கங்களின் சார்பின்றி அவர்களது பொருள் உதவியின்றி தனிப்பட்ட முறையில் சமயப் பணியாற்றும் நோக்குடன், போதிய பொருளின்றி தஞ்சையிலிருந்து மனைவி மற்றும் ஐந்து மக்களுடன் மாட்டு வண்டியில் ஏறி 24 நாட்கள் பயணம் செய்து உதகமண்டலம் சென்றார்.[1]

உதகையில் ஐரோப்பிய மாணவர்களுக்கு ஆசிரியராக அமர்ந்து பாடம் சொன்னார், பின்னர் உதகையில் சிறந்த பள்ளியை உருவாக்கினார், சிறைத் தண்டனை பெற்றிருந்த ஐரோப்பிய குற்றவாளிகளைக் கண்டு பேசுவார். இடைவிடாது பழைய தமிழ்நூல்களைக் கற்றுவந்தார். பழைய ஏட்டுச் சுவடிகளைத் தேடிச் சேகரித்தார்.

உதகையில் அவரது பணிக்காக இங்கிலாந்தின் கந்தர் புரி அத்தியட்சர்'மறை நூற் புலவர்' எனும் பட்டம் அளித்தார்.

பெங்களூரில்

1871இல் சில சூழல் காரணமாக பெங்களூர் சென்று அங்கு கல்விப் பணியும் சமயப்பணியும் ஆற்றினார். அங்கு உடல் நலம் குன்றியதால் 1882இல் இங்கிலாந்து திரும்பினார்.

தமிழ்த் தொண்டுகள்

- இங்கிலாந்து பல்கலைக்கழகம் ஒன்றில் 1885 முதல் 1908 வரை தமிழ் மற்றும் தெலுங்கு கற்பிக்கும் பேராசிரியராக பணியாற்றினார்.
- 1886 ஆம் ஆண்டு திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிப்பெயர்த்தார்.
- புறப்பொருள் வெண்பா மாலை, புறநானூறு, திருவருட்பயன் போன்ற நூல்களை பதிப்பித்தார்.
- தமிழ் மீது பெரும் பற்று பெற்ற அவர் நாலடியார், திருவாசகம் ஆகியவற்றையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்.

மூன்று இறுதி விருப்பங்கள்

முதுமையில் தளர்ச்சியடைந்த சமயம் தமது நண்பரிடம் மூன்று விருப்பங்களைத் தெரிவித்திருந்தார் ஜி.யு.போப்.

- இறப்புக்கு பின் தனது கல்லறையில் *இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்கிக் கொண்டிருக்கிறான்* என்ற வாசகம் இடம்பெற

வேண்டும் **(அவரது உயிலிலோ அவரது கல்லறையிலோ அத்தகைய கருத்து சேர்க்கப்படவில்லை).**

- தமது கல்லறைக்குச் செலவிடும் தொகையில் ஒரு சிறுபகுதியாவது தமிழ் மக்களின் நன்கொடையால் அமைய வேண்டும். பச்சையப்பன் கல்லூரித் தமிழ் பேராசிரியர் செல்வக் கேசவராயர் தமிழன்பர்களிடம் நன்கொடை திரட்டி இங்கிலாந்துக்கு அனுப்பி வைத்தார்.
- கல்லறையில் தம்மை அடக்கம் செய்யும் போது தான் மொழிபெயர்த்து வெளியிட்ட திருக்குறள் மற்றும் திருவாசகத்தையும் உடன் வைக்க வேண்டும் என்பது.

ஜி.யு. போப் (G.U. Pope) திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்ட ஆண்டு **1900** ஆகும்.
இந்நூல் 'The Thiruvasagam or Sacred Utterances' என்ற பெயரில் வெளியிடப்பட்டது. இதுவே அவரது தமிழ் இலக்கிய மொழிபெயர்ப்பின் சிகரமாகக் (Magnum Opus) கருதப்படுகிறது.

இதர முக்கிய தகவல்கள்:

- **திருக்குறள் மொழிபெயர்ப்பு ஆண்டு:** 1886
- **நாலடியார் மொழிபெயர்ப்பு ஆண்டு:** 1893

கூடுதல் விவரங்களை அறிய தமிழ் விக்கிப்பீடியா பக்கத்தைப் பார்க்கவும்.

தமிழுக்கு அரும்பணியாற்றிய மேலைநாட்டு அறிஞரான ஜி.யு. போப் (G.U. Pope), பல தமிழ் இலக்கியங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். அவை பின்வருமாறு:

- **திருக்குறள்:** (The Sacred Kural) 1,330 குறட்பாக்களையும் முழுமையாக ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.
- **திருவாசகம்:** (The Tiruvacagam) மாணிக்கவாசகரின் திருவாசகத்தை முழுமையாக ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, விரிவான விளக்கங்களுடன் வெளியிட்டார்.
- **நாலடியார்:** (Naladiyar or Four Hundred Quatrains in Tamil) நீதி நூலான நாலடியாரை ஆங்கிலத்தில்

மொழிபெயர்த்து, முன்னுரை மற்றும் அகராதிகளுடன் பதிப்பித்தார்.

- **புறநானூறு:** சங்க இலக்கியமான புறநானூற்றின் பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து உலகிற்கு அறிமுகப்படுத்தினார்.
- **புறப்பொருள் வெண்பாமாலை:** இந்நூலையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.
- **திருவருட்பயன்:** உமாசிவாசாரியாரால் இயற்றப்பட்ட இந்நூலையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.
- **நான்மணிக்கடிகை:** பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான இந்நூலில் உள்ள சில பாடல்களை மொழிபெயர்த்துள்ளார்.

மேலும், தமிழ் இலக்கணத்தை மேலைநாட்டினர் எளிதாகக் கற்கும் வகையில் 'Elementary Tamil Grammar', 'A Larger Grammar of the Tamil Language' ஆகிய இலக்கண நூல்களையும், தமிழ்-ஆங்கில அகராதியையும் உருவாக்கியுள்ளார்.
இவரது மொழிபெயர்ப்பு நூல்கள் பற்றிய கூடுதல் விவரங்களை Project Madurai மற்றும் Online Books Page தளங்களில் காணலாம்.

(😊)(😊) ஜி யு போப் (😊)(😊)



